## எனது பிள்ளையின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க நான் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் பிள்ளைகளுக்குக் இவற்றின்வழி நீங்கள் ஆதரவு வழங்கலாம்:

- குடும்பம் கொண்டுள்ள விழுமியங்கள் நம்பிக்கைகள் குறித்து அறிவுறுத்தல்
- பாலியல் பிரச்சினைகளைப்பற்றி உங்கள் பிள்ளையிடம் மனம்திறந்து பேசுதல்
- வீட்டில் கற்பதற்கான வாய்ப்புகளுக்கு உடன்பாடான ஆதரவு வழங்குதல்
- பொறுப்புடன் நடந்துகொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்
- உங்கள் பிள்ளைக்கு அறிவுரை வழங்கவும் வழிகாட்டவும் எப்போதும் இருத்தல்
- பள்ளிக்குக் கருத்துத் தெரிவித்தல்

## தெரிவு

உங்கள் பிள்ளையின் முழுமையான வளர்ச்சியில் உங்களுக்கு மிக இன்றியமையாத பங்கு உள்ளது. எனவே, பதின்ம வயதினருக்கான திட்டத்தில் உங்கள் பிள்ளையை ஈடுபடுத்துவதா விலக்கிக்கொள்வதா என்பதை முடிவு செய்யலாம். விலகுவதற்கான படிவத்தைப் பறுவதற்கு நீங்கள் உங்கள் பிள்ளையின் பள்ளியை அணுகலாம். மாறாக, பள்ளியின் இணையத்தளத்திலிருந்தும் அப்படிவத்தை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**கல்வியின் அனைத்து அம்சங்களுக்கும் பள்ளி-சமூகக் கூட்டுறவு மிகவும் முக்கியமானதாகும்.**
**பாலியல் கல்வியில் பற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு ஆதரவாக இருப்பதோடு, கற்பிக்கப்படும் விழுமியங்களை வலியுறுத்தவும் பள்ளியுடன் ஒன்றிணைந்து செயல்பட்டு, பதின்ம வயதினர் உகந்த முடிவுகளை எடுக்க உதவி செய்யலாம்.**

Ministry of Education
SINGAPORE

# பருவ வளர்ச்சிக்கான திட்டம் (தொடக்கநிலை 5 , 6) பள்ளிகளில் பாலியல் கல்வி

*பெற்றோருக்கான தகவல்கள்*



Parent's Brochure_Tamil.indd 1 4/3/12 3:37 PM

## பாலியல் கல்வி என்றால் என்ன?

பாலியல் கல்வியின் மூலம், மாணவர்கள் பக்குவம் அடையும்போது அவர்களுக்குள் நிகழும் உடல், சமூகம் மற்றும் மனரீதியான மாற்றங்களைப் புரிந்துகொள்ளக் கற்றுக்கொள்வார்கள்; அதனால் இரு பாலாருக்கிடையே ஆரோக்கியமானதும் மதிப்புமிக்கதானதுமான உறவுகளை வளர்த்துக்கொள்ள முடியும்; மேலும் பாலியல் தொடர்பான விஷயங்களில் பொறுப்புடன் முடிவுகளை எடுக்க முடியும்.

## எத்தகைய அணுகுமுறை கையாளப்பட்டது?

பருவாரியான சிங்கப்பூர் சமுதாயம் நம்பும் விழுமியங்களின் அடிப்படையிலும் குடும்பம் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்னும் அடிப்படையிலும் பாலியல் கல்வி கற்பிக்கப்படுகிறது. திருமணம் புரிந்து கொண்ட ஜோடிக்கிடைடே ஆரோக்கியமான உறவுமுறை ஊக்குவித்தல் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களின் ஆதரவுடன் ஒரு நிலையான தனிக்குடும்பத்தை அமைப்பதற்கு அவர்களை ஊக்குவித்தல் என்பதுமே இதன் பொருளாகும்.

பதின்ம வயதினர் திருமணத்திற்கு முன்பு உடலுறவில் ஈடுபடாமல் கட்டுப்பாட்டுடன் இருப்பதே சிறந்தது என பாலியல் கல்வி கற்பிக்கிறது. மலும் பாலியல் நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் ஆபத்துகளையும் இது கற்பிக்கிறது. மற்றும் விரும்பத்தகாத அபாயங்கள் ஏற்படக்கூடும் என்பதால் திருமணத்திற்கு முன்டே உடல் உறவில் ஈடுபடுவதை பாலியல் கல்வி ஒருபோதும் ஊக்குவிப்பதில்லை.

## பருவ வளர்ச்சி காலத் திட்டம் என்றால் என்ன?

பருவ வளர்ச்சி காலத் திட்டம் என்பது உடல், மனம், சமூகம், ஒழுக்கநெறி முதலியவற்றை உள்ளடக்கிய பாலியல் உறவு தொடர்பான அம்சங்களை முழுமையான கண்ணோட்டத்தில் அணுகுகிறது.

இத்திட்டம் வளரும் ஆண்டுகளில் மாணவர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு தொடக்கநிலை 5, 6, கீழ் உயர்நிலை, மேல் உயர்நிலை, கல்லூரி மற்றும் கல்வி நிலையங்களுக்காக வடிவமைக்கப்பட்ட பாடத் தொகுப்புகளை கொண்டுள்ளது.

## பருவ வளர்ச்சிகாலத் திட்டத்தின்மூலம் எனது பிள்ளை எவ்வாறு பயனடையலாம்? (தொடக்கநிலை 5, 6)

பருவ வளர்ச்சி காலத் திட்டத்தின்மூலம் (தொடக்கநிலை 5, 6) உங்கள் பிள்ளை:

- பருவம் அடையும்போது ஏற்படக்கூடிய மாற்றங்களைப் புரிந்துகொண்டு தன் னயும் மற்றவர்களையும் மதிக்கப் புரிந்துகொள்வர்.
- குடும்ப உறுப்பினர்களின் ஆதரவுடனும் அன்புடனும் சக நண்பர்களுடன் ஆரோக்கியமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்வர்.
- தீங்கு விளைவிக்கும் சூழ்நிலைகளில் பாதுகாப்பாக இருந்து கொள்ளவும் தேவை ஏற்பட்டால் உதவியை நாடவும் அறிந்துகொள்வர்.

## பருவ வளர்ச்சிகாலத் திட்டத்தில் உள்ளவை (தொடக்கநிலை 5, 6)

- **பருவம் அடைதல்**
  பருவம் அடைதலினால் ஏற்படக்கூடிய உடல் மற்றும் மன ரீதியான மாற்றங்களைச் சமாளிப்பதற்கான வழிகள்
- **உறவுகள்**
  குடும்பம் மற்றும் நண்பர்களின் முக்கியத்துவமும் ஆரோக்கியமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதற்குத் தேவையான திறன்களும் விழுமியங்களும்.
- **காதலும் ஈர்ப்புணர்வும்**
  காதலுக்கும் ஈர்ப்புணர்வுக்கும் இடையிலான வேறுபாடுகள். ஈர்ப்புணர்வால் ஏற்படக்கூடிய உணர்வுகளை கட்டுப்படுத்துவதற்கான வழிகள்
- **பாலியல் வன்முறை**
  பாலியல் வன்முறையின் விளக்கம். அதிலிருந்து ஒருவர் தன்னைத்தானே காத்துக்கொள்வதற்கு உதவிகளை நாடுவதற்கான வழிகள்
- **ஊடகத்தினால் ஏற்படும் தாக்கம்**
  ஊடகச் செய்திகளின் நம்பகத்தன்மையைப் பகுத்தறியும் வழிகள். மேலும் சமூக இணையத்தளங்களின் வாயிலாக ஏற்படும் உறவுகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் வழிகள்.